# டாபிந்து

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது

ஆரம்பம் 1984

மலர் 40 இதழ் 04 2024 பங்குனி மாதப் பதிப்பு


# மகளிர் தினக் கொண்டாட்டம் 2024



2024ம் ஆண்டு மகளிர் தினத்தை மையமாகக் கொண்டு டாபிந்து கூட்டமைப்பினால் 2024ம் ஆண்டு பங்குனி மாதம் 10ம் திகதி மகிளர் தினக் கொண்டாட்டமானது இம்முறை வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களை மையமாகக் கொண்டு இடம்பெற்றது. இதன் இவ்வருட கருப்பொருளாவது, **“பெண்களுக்காக முதலீடு செய்யுங்கள்: அபிவிருத்தியை துரிதப்படுத்துங்கள்”** என்பதாகும். இந்த கொண்டாட்டங்களுக்கு மத்தியில் டாபிந்து உறுப்பினர்கள் மற்றும் ஏனைய சிவில் அமைப்புக்களின் பங்குபற்றுதலுடன், மகளிர் தினக் கொண்டாட்டமானது, கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆடைத் தொழிலாளர்கள் 150இற்கும் அதிகமானோர் மற்றும் ஏனைய அமைப்பு பிரதிநிதிகள் 30 இற்கும் அதிகமானோரின் பங்குபற்றுதலுடன் கிளிநொச்சி ப்ரண்டஸ் இன் (Frienda Inn) ஹோட்டலில் இடம்பெற்றது. இடம்பெற்றது. வழக்கம்போல் மங்கள விளக்கேற்றுதல் மற்றும் வரவேற்பு

2ஆம் பக்கம் பார்க்க...

## உள்ளே!


பக்கம் 03 – மகளிர் தினக் கொண்டாட்டம்
பக்கம் 04- 07 – எமது பணி
பக்கம் 08 – வெளிநாட்டுச் செய்தி
பக்கம் 09 – ஆரோக்கியம்
பக்கம் 10 – எமது எண்ணம்
பக்கம் 11 – தொழிலாளர் செய்தி

## வியர்வைத்துளி கூட்டமைப்பு

221, வெலபட வீதி, கட்டுநாயக்க.
தொ.பே: 011 4 851 383
மின்னஞ்சல்: dabindu.infoco@gmail.com
முகநூல்: dabindu collective sri lanka:


# பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வெற்றியைக் கொண்டாடுவதற்கு முன்னின்ற சர்வதேச மகளிர் தினம்

113வது சர்வதேச மகளிர் தினத்தை பூகோள ரீதியைப் போன்று சர்வதேச ரீதியிலும் மிக சவால்கரமான சூழ்நிலையில் கொண்டாடுவதற்கு தீர்மானித்ததுடன், இம்முறை ஐக்கிய நாடுகள் அமைப்.பின் கருப்பொருளாக அமைவது பெண்களில் முதலீடு செய்யுங்கள் - அவர்களின் முன்னேற்றத்திற்காக அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்காக என்பதாகும். ஆனால் அந்த செயற்பாட்டை பிரயோக முறையில் பூமியில் நிலைநாட்டுவதில் நாம் தோல்வியடைந்தவர்களாக காணப்படுகின்றோம். நிரந்தரமான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, சீடோ பரிந்துரை மற்றும் சர்வதேச தொழிலாளர் சட்டம் மற்றும் நிகழ்கால சட்ட சீர்திருத்தத்தின் மூலம் பெண்களை பின்னால் தள்ளப்படும் நிலைமையினுள் மற்றும் தொழிலாளர்களின் உழைப்புச் சுரண்டுதலினுள் நடைபெறும் குறைந்த ஒத்துழைப்பினுள் அவளுக்கு காட்டப்படும் பாகுபாடு பற்றி தெளிவாக விளக்கப்படகின்றது.

தீர்மானமெடுக்கும் இடம் முதல் இன்னும் அந்த இடத்தை ஒழுங்கமைத்துக் கொள்வது தொடர்பில் மற்றும் போராட்டங்களை மேற்கொள்வதற்கு நேர்ந்துள்ளது. பெண்களை ஊக்கப்படுத்தும் வேலை உலகினுள் முன்னோக்கி செல்வதற்கு தேவையான வசதிகளை வழங்கிக் கொடுத்தல், அது தொடர்பாக கொள்ளைகளை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகள் செயலிழந்தவையாகக் காணப்படுகின்றன. பெண்களின் உழைப்புச் சுரண்டுதலுக்கு ஒன்றுகூடும் இடங்களைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள படிமுறைகள் தொடர்பாக மன உளைச்சலுக்கே நாம் உள்ளாக்கப்டுகின்றோம். மகப்பேற்று மற்றும் பாதுகாப்பு பிரிவில் தொழில் தொடர்பாக பெண்களின் மீதுள்ள சுமையால் அவள் தானாகவே உழைப்பிலிருந்து விலகுவதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றாள். பிள்ளைகளின் கல்விக்கு, சுகாதாரத்திற்கு, உணவு, தின பாதுகாப்பிற்காக வசதிகளை செய்து கொடுத்தலைப் போன்று புதிய சட்ட சீர்த்திருத்தங்களின் மூலம் இடம்பெறுவது மேலும் முறைசாரா பிரிவில் தொழிலில் ஈடுபடுவதற்கு நேரிடும் வழிகளை உருவாக்குவதாகும்.

அடிப்படை மனித உரிமைகளை பாதுகாக்கும் சமத்துவம், செழிப்பு மற்றும் வளமான உலகை உருவாக்குவதற்காக அவளுக்கு நல்லதோர் தொழிற்சூழல் உருவாக்குவதற்கான வசதிகளை செய்து கொடுத்தல் மற்றும் அது தொடர்பான கொள்ளைகளை பிறப்பித்தல் மற்றும் துரிதப்படுத்தலினூடாக மட்டும் அவளுக்கு ஜனநாயக ரீதியான பின்னணியினுள் குடியுரிமையை உறுதிப்படுத்துவதற்கு முடியுமாயிருக்கும். அதற்காக முன்னின்று செயற்பட அனைவரும் கைகோர்த்து ஒன்றிணைய வேண்டும்.

1ஆம் பக்கத் **மகளிர் தினக் கொண்டாட்டம்...**

நிகழ்வு ஆரம்பமாகியதுடன், டாபிந்து கூட்டமைப்பின் நிர்வாக இயக்குனரான சமிளா துஷாரி அவர்களினால் அத்தினத்திற்கான குறிக்கோள் விளக்கப்படுத்தப்பட்டது. இங்கு அவர்களினால் தற்கால பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெண் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சழனை பிரச்சினை தெளிவுறுத்தப்பட்டது. நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் பொருட்களின் விலைகளுக்கு மத்தியில் தாம் பெறும் ஊதியத்தை சமாளித்துக் கொண்டு வாழ்க்கைச் சுமையை தாங்கிக் கொள்வதற்கு தொழிலாளர்களிடம் காணப்படும் இயலாமையைக் குறித்து தமது உரையில் தெளிவாக குறிப்பிட்டார்.

இந்த செயற்றிட்டத்திற்கு அமைவாக கிளிநொச்சி பிரதேசத்தில் இடம்பெற்ற கொண்டாட்டத்திற்கு நியந்தினி கதிர்காமர் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன், பிரதம விருந்தினர் உரையையும் சிறப்பித்தார். அவர் தமது உரையில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் போன்று தற்போதளவில் பெண்கள் எதிர்கொள்ள நேரிடுகின்ற பிரச்சினைகள் குறித்து கருத்துக்களை வெளியிட்டார். வெவ்வேறு நடன நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், தொழிற்சாலைகளில் இடம்பெறுகின்ற நிலைமைகள் குறித்தும் எமது தொழிற்சாலை உறுப்பினர்களின் கருத்து வெளியீட்டு உரையும் இங்கு விசேடமாக இடம்பெற்றது. அன்றைய நிகழ்வை மேலும் சிறப்பிப்பதற்கு வீதி நாடகம் மற்றும் பரத நாட்டிய நிகழ்வு இடம்பெற்றதுடன், எமது ஆடைத் தொழிலாள உறுப்பினர்களினால் அவர்களின் திறமையை வெளிக்காட்டும் வகையிலான பாடல் மற்றும் நடனமும் இடம்பெற்றது.






# மகளிர் தினக் கொண்டாட்டம்

சமூகங்கள் மீது தாக்கத்தை விளைவிக்கும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் உலகத்தில் ஆண்- பெண் சமத்துவத்தை சாதிப்பது அனைத்தையும் விட மேலானதாகும். ஆரோக்கியமான சாதாரண பொருளாதாரம் மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக ஆரோக்கியமான உலகொன்றை உருவாக்குவதற்காக காணப்படும் ஒரே வழியாக அமைவது, வாழ்வின் அனைத்து பிரிவுகளிலும் பெண்களின் மற்றும் பெண் பிள்ளைகளின் உரிமையை உறுதிப்படுத்துவதாகும். 2030ம் ஆண்டாகும் போது, ஆண் - பெண் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதன் பிரதான சவாலாக அமைவது யாதெனில், ஆண் - பெண் சமத்துவத்தின் படிமுறை செயற்பாடுகளுக்காக செலவுகளை மேற்கொள்ளும் போது, வருடாந்தம் 360 பில்லியன் டொலர்கள், பற்றாக்குறை நிதியுதவியின் ஆபத்தானதோர் பற்றாக்குறையாகும். பெண்களுக்கென்றே ஒதுக்கப்பட்ட சர்வதேச மகளிர் தினமானது, மார்ச் மாதம் 8ம் திகதி கொண்டாடப்படுகின்றது. இவ்வருடத்திற்கான மகளிர் தின கருப்பொருள் யாதெனில், "பெண்களின் முன்னேற்றத்திற்காக முதலீடுகளை துரிதப்படுத்தவோம்" என்பதாகும்.

பெண்களுக்கு உரித்தான சம உரிமைகள் தொடர்பான வேண்டுகோள் 20ம் நூற்றாண்டின் ஆரம்பக்காலப்பகுதி வரை தொடர்கின்றது. பெண் தொழிற்சங்க உரிமைகளைக் கோரி, 1857ஆண்டு மார்ச் மாதம் 8ம் திகதி அமெரிக்காவில் நிவ்யோர்க் நகரிலுள்ள ஆடைத்தொழிற்சாலை பெண் தொழிலாளர்கள் எதிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டதாக சட்டபூர்வமற்ற அறிக்கையொன்றை வெளியிட்டாலும், அதன் பின்னர் எமக்குத் தெரிய வந்தது யாதெனில், அது உருவாக்கப்பட்டது ஒரு சம்பவத்தின் அடிப்படையிலாகும். பெண்களுக்கு சம உரிமைகளைக் கோரி, முதலாவது உத்தியோகபூர்வ எதிர்ப்புப் போராட்டம் தொடர்பாக அறிக்கையிடப்படுவது அமெரிக்காவிலாகும். 1908ம் ஆண்டு நிவ்யோர்க் நகரில் இடம்பெற்ற இந்த எதிர்ப்புப் போராட்டத்திற்கு 15000இற்கும் அதிகமானோர் ஒன்றுகூடினர். ஏவ்வாறாயினும், உத்தியோகபூர்வமாக முதன்முறையாக மகளிர் தினத்ததை கொண்டாடியது 1909ம் ஆண்டு மாசி மாதம் 28ம் திகதியாகும். சமூக செயற்பாட்டாளர் திரேசா மல்கியேலின் வேண்டுகோளின் பேரில், அமெரிக்க சோசலிச கட்சி நிவ்யோர்க்கில் மகயிர் தினத்தை கொண்டாடியுள்ளனர். எவ்வாறாயினும் இது தேசிய கொண்டாட்டமாக மட்டுமே இருந்தது.

முதன்முறையாக சர்வதேச ரீதியிலான மகளிர் தினம் கொண்டாடப்பட்டது, 1911ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் திகதியாகும். அந்த பெண்களுக்கு சம உரிமையானது, ஐரோப்பாவில் இடம்பெற்ற சித்தாதங்களை அடிப்படையாகக் கொண்டு கிடைக்கப்பட வேண்டும். அன்றைய தினம் டென்மார்க், அவுஸ்திரேலியா, ஜேர்மன் மற்றும் சுவிஸ்லாந்து பெண்கள் மில்லியன் எண்ணிக்கையானோர் சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடியதாக அறிக்கைகளில் குறிப்பிடப்படுகின்றது. அதற்கு அமைவாக அவுஸ்திரேலியா மற்றும் ஹங்கேரியாவில் மட்டும் பெண்களுக்கான சம உரிமை கோரி, இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டோரின் எண்ணிக்கை 300இற்கும் அதிகமாகும். பெண்களுக்கு வாக்களிப்பதற்கான உரிமை மற்றும் அரச பதவிகளில் பணிபுரிவதற்கான உரிமைகளைக் கோரி ஐரோப்பா முழுவதும் எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. இந்த குறிப்பிட்ட காலமானது பெண்கள் உரிமை தொடர்பான மிக அவதானம் மிக்க கேச்சுவார்த்தை இடம்பெற்ற காலமெனலாம்.

எவ்வாறாயினும், அந்நேரத்திலும், சர்வதேச மகளிர் தினத்திற்காக குறிப்பிட்ட தினமொன்று காணப்படவில்லை. இதன்படி, 1914ம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் திகதி ஜேர்மனில் சர்வசே தினம் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது மார்ச் மாதம் 8ம் திகதி விடுமுறை தினமாதலால் ஆகும். ஆனால் 1967ம் ஆண்டுவரை பெண்கள் உரிமைகளுக்காக மற்றும் மகளிர் தினக் கொண்டாட்டம் தொடர்பான அதிக அவதானம் செலுத்தப்படவில்லை. 1970ம் மற்றும் 80ம் ஆண்டுகளில் மீண்டும் பெண்களின் உரிமைகள் தொடர்பான தமது கவனத்தை செலுத்தியதற்கான காரணம் யாதெனில், சம ஊதியம் உட்பட பெண் சம உரிமை மற்றும் பெண் வன்முறைக்கு எதிராக பெண்கள் தமது குரல்களை எழுப்பியதாலாகும். இது தொடர்பாக ஐக்கிய நாடும் தமது அவதானத்தை செலுத்தியதுடன், அவர்கள் முதல்முறை மகளிர் தினத்தை கொண்டாடியது 1975ம் ஆண்டிலாகும். 1977ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடுமாறு அவர்கள் சர்வதேச மக்களிடம் கோரிக்கை விடுத்தனர். மார்ச் 8ம் திகதி சர்வதேச மகளிர் தினமாக பிரகடனப்படுத்தியதும் இதன்பின்னர்தான். அதுமுதல் ஐக்கிய மக்கள் உட்பட, பல நாடுகள் ஒவ்வொரு வருடமும் வெவ்வேறு சர்வதேச கருப்பொருள்களின் கீழ் இது கொண்டாடப்பட்டு வருகின்றது.

தற்கால உலகினுள் கொவிட் தாக்கம், அரசியல் பிளவுகள், காலநிலை மாற்றங்கள் மற்றும் பொருளாதார நெருக்கடி என்பன 2020 முதல் 75பில்லியன் கணக்கான மக்களை பாரிய இழப்பொன்றுக்கு தள்ளப்பட்டனர். இது 2030ம் ஆண்டாகும் போது வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள 342இற்கும் அதிகமான பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு மிக பாரிய விளைவு ஏற்பட காரணமாகியது. இராணுவ மோதல்கள் மற்றும் எரிபொருள் மற்றும் உணவு விலை அதிகரிப்பின் காரணமாக 2025ம் ஆண்டாகும் போது நூற்றுக்கு 75வீதமான நாடுகளில் இருந்து அரச செலவுகளை மட்டுப்படுத்தியுள்ளதாக அண்மையில் கிடைக்கப்பட்ட மதிப்பீடுகளின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. மாற்று பொருளாதார மாதிரிகளுக்காக முன்னிற்கும் பெண்களின் குரல் விரிவடைந்து செல்லும் பொருளாதாரம் மற்றும் அக்கறைமிக்க சமுதாயத்தினை நோக்கிய மாற்றத்தினை குறிப்பிடுகின்றனர். எமக்கு வளமான பொருளாதாரம் மற்றும் ஆரோக்கியம் மிக்க உலகை உருவாக்குவதற்கு தேவையாயின், வாழ்க்கையின் அனைத்து பிரிவுகளிலும் ஆண் - பெண் சமத்துவத்தை மற்றும் பெண்களின் நல்வாழ்வை மேம்படுத்துவது மிக தீர்மானமிக்கதாக உள்ளது.

ஆண் - பெண் சமத்துவம் என்பது அனைவருக்கும் நன்மை கிடைக்கப்பெறச் செய்யும் பாரிய மனித உரிமை தொடர்பான அச்சுறுத்தலாகும். இந்த சர்வதேச மகளிர் தினத்தில் சவாலான சந்தர்ப்பங்களை இனங்கண்டு அனைவருககும் ஆரோக்கியம் மிக்கதோர் எதிர்காலத்தை உருவாக்க ஒன்றிணைவோம்!

சச்சினி மதுரப்பெரும

# டாபிந்துவின் நடமாடும் சிகிச்சை சேவைத் திட்டம்



சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்புரியும் தொழிலாளர்களுக்காக டாபிந்துவின் நடமாடும் சிகிச்சை சேவைத் திட்டம் கடந்த மார்ச் மாதம் 17ம் திகதி கட்டுநாயக்கவில் அமைந்துள்ள டாபிந்து அலுவலக வளாகத்தில் “ஒருநாள் மருத்துவ பரிசோதனை” இடம்பெற்றது. டாபிந்து கூட்டமைப்பின் பூரண அனுசரனையுடன் சீதுவ பொது சுகாதார அதிகாரி தலைமையில் இடம்பெற்ற இந்த மருத்துவ பரிசோதனைக்காக மூன்று வைத்தியர்கள் உட்பட சில தாதிகளும் இந்த செயற்றிட்டத்திற்கு கலந்து கொண்டதுடன், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 100 பேருக்கு இந்த மருத்துவ பரிசோதனையில் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனை, மருத்துவ ஆலோசணை மருந்து மற்றும் உணவ என்பன இலவசமாக வழங்கப்பட்டதுடன் மேலதிகமான பரிசோதனை மற்றும் ஆலோசணைக்காக உடனடி ஈடுபாடும் காணப்பட்டது.

மருத்துவ பரிசோதனை மற்றும் பெண் தொழிலாளர்களுக்கான வெவ்வேறு பரிசோதனைக்கான வசதிகள் இங்கு மேற்கொள்ளப்பட்டன. உடல் பரிசோதனை, குருதியமுக்கம், நீரிழிவு பரிசோதனை, கொலஸ்ரோல் பரிசோதனை, மார்பக பரிசோதனை மற்றும் கருப்பை வாய்ப்பகுதி திரையிடல் பரிசோதனை (பாப் டெஸ்ட்), குடும்ப கட்டுப்பாட்டு ஆலோசணை மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பாகவும், மாதவிடாய் பிரச்சினைகளுக்கான ஆலோசணை மற்றும் சுகாதார கல்வி என்பனவும் இடம்பெற்றன.

மருத்துவ பரிசோதனைகளுக்கு கலந்து கொள்வதற்கு மேலதிகமாக குடும்ப கட்டுப்பாடு, கருக்கலைப்பு மற்றும் இனப்பெருக்கம் தொடர்பான நோய்கள் மற்றும் புற்றுநோய் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு மற்றும் இவற்றின்போது கடைபிடிக்கப்பட வேண்டிய முறைகள் தொடர்பாகவும் தொழிலாளர்களுக்கு மிகத் தெளிவான விழிப்புணர்வு வைத்தியர் ரவி சில்வாவினால் இடம்பெற்றது.

சீதுவ பொது சுகாதார அதிகார காரியாலயத்தின் தலைவர் வைத்தியர் ரவி சில்வா உட்பட வைத்தியர் சுபிபி த சில்வா, வைத்தியர் சமிந்த செனரத், பொது சுகாதார தாதிகள், 6 உதவியாளர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட 100 தொழிலாளர்களுக்கான ஒருநாள் இலவச வைத்திய பரிசோதனை இடம்பெற்றது.

# பொது சமையலறை





நாட்டில் இடம்பெறும் தற்கால பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சத்துள்ள உணவு வேளையொன்றை பூர்த்தி செய்து கொள்வதென்பது பெரும்பாலானோரின் சவாலாக உள்ளது. ஆடைத் தொழிற்சாலை பெண்களுக்கு நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் உணவானது எந்தவொரு வகையிலும் போசணைமிக்க உணவொன்றாக தயாரிக்கப்படுவதில்லை. இவ்வாறு குறைந்த போசணை மட்டங்களில் தொழில்புரியும் பெண் தொழிலாளர்களுக்கு ஓர் ஆதரவாக டாபிந்து கூட்டமைப்பானது பொது சமையலறை எனும் செயற்றிட்டத்தை ஆரம்பித்தது. இதனூடாக பெண் தொழிலாளர்களுக்கு அவர்களின் ஒத்துழைப்புடன் போசணைமிக்கதான உணவு வேளையொன்றை பூரத்தி செய்வதற்கு முடிந்தது. இம்முறை டாபிந்து பொது சமையலறையானது, நற்பணியொன்றாக மாசி மாதம் 08ம் திகதி பியகமவில் இடம்பெற்றது.

# ஆலோசணை செயற்றிட்டம்






உளநல ஆரோக்கியமென்பது எந்தொருவரின் வாழ்க்கையிலும் அவர்களின் நல்வாழ்விற்கான அடிப்படை காரணியாகும். விசேடமாக வெவ்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ஆடைத் தொழிற்சாலையில் தொழில்புரியும் பெண் தொழிலாளர்களின் உளநல ஆரோக்கியம் தொடர்பாக உணர்ச்சிபூர்வமான முன்னிற்றலை ஓர் சமூக சேவையாகக் கொண்டு செயற்படுவது டாபிந்துவாகிய எமது பணிகளுள் ஒன்றாகும். தனி அல்லது குழு முறையில் இந்த செயற்றிட்டம் இடம்பெற்றதுடன், ஆலோசணை செயற்றிட்டமும் முன்னெடுக்கப்பட்டது. 2024ம் ஆண்டு மார்ச் மாதம் 03ம் திகதி கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் குழு ஆலோசணை செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன் வளவாளர்களாக அன்டன் புனிதன் மற்றும் பிரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தொழிலாளர் சட்டம் தொடர்பாக அறிவுறுத்தும் பயிற்சி செயற்றிட்டம்





சட்டம் மற்றும் சமூகம் தொடர்பான சிவில் அமைப்பினால் சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்புரியும் பெண்களுக்காக முன்னிற்கும் சிவில் அமைப்புக்களில் தொழிலாளத் தலைவர்களுக்காக இருநாள் திறன்களை மேம்படுத்தும் செயற்றிட்டமானது, கடந்த மாசி மாதம் 23ம் மற்றும் 24ம் திகதிகளில் மினுவங்கொடயில் இடம்பெற்றது. இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிலாளத் தலைவர்கள் 25பேருக்கு இந்த செயற்றிட்டத்திற்கு கலந்து கொண்டதுடன், டாபிந்து கூட்டமைப்பின் அலுவலர்களும் இதில் கலந்து கொண்டனர். தொழிலாளர் உரிமைகள், தொழிலாளர் சட்டம் மற்றும் சுதந்திர வர்த்தக வலயத்தினுள் தொழில்புரியும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தலை நோக்காகக் கொண்ட வேறு அவதானம்மிக்க பிரிவு தொடர்பாக பரந்த புரிந்துணர்வொன்றை வழங்குதல் இந்த செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாகக் காணப்பட்டது. இங்கு பிரதானமாக,

- அடிப்படை உரிமைகள் மற்றும் தொழிலாளர் சமூகம்
- சமூக பாதுகாப்பு
- தொழிலாளர் பிரச்சினைகளுக்கான சட்ட செயற்பாடுகள்

போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர மற்றும் சட்டத்தரணி ஜயந்த தெஹிஅத்தகே ஆகியோர் இந்த செயற்பாட்டில் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.



# பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் செயற்றிட்டம்



2024ம் ஆண்டின் மாசி மாதம் 9ம் மற்றும் 10ம் திகதிகளில் டாபிந்து கூட்டமைப்பினால் வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் செயற்றிட்டத்தை மேற்கொண்டது. வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பங்குதாரர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இதற்காக அந்த பிரதேசங்களில் தொழில்புரியும் ஆடைத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் நெருக்கடி மற்றும் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் முகங்கொடுக்கும் நெருக்கடிகள் தொடர்பில் அவர்கள் அறிவுறுத்தப்பட்டதுடன், அவர்கள் தொழிற்சாலையினுள் மற்றும் பொது இடங்களில் முகங்கொடுக்கும் வன்முறைகள் மற்றும் துஸ்பிரயோகங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், அவர்கள் தத்தம் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர். மேலும் தொழிலாளர் சட்டங்கள், புதிய தொழிலாளர் சட்ட சீர்த்திருத்தங்கள் மற்றும் ஆண் - பெண் சமத்துவம் தொடர்பிலும் அமர்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த பிரச்சினைகள் குறித்து எதிர்கால செயற்றிட்டங்களும் பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டது.








# உலக சமூக மாநாடு 2024 (WSF2024Nepal)
## "வேறு உலகை நோக்கிய பயணத்தை அடைய முடியும்"




புவிக்கிரகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், தற்போதளவில் முன்பு காலங்களைப்போன்றல்லாமல் பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்திருப்பதுடன், அதிகரித்துச் செல்லும் அசாதாரணம், பரவலடைந்த செல்லும் உணவு தட்டுப்பாடு, பாரிய வன்முறை, கொவிட் தொற்றின் தாக்கம் மற்றும் சர்வதேச யுத்தம் என்பன அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. தென் ஆசியாவின் நாடான நேபாள் காத்மண்டு நகரில் WSF 2024 இடம்பெற்றது. நேபாளின் அரசியல் முறையானது, ∴பெடரல் பாராளுமன்ற குடியரசினால் பின்பற்றப்படுகின்றது. கலாசார, சமய, மொழி மற்றும் இன ரீதியாக நேபாளின் சோசலிஸத்திற்காக அரசியலமைப்பானது, தியாகத்துடன் கூடிய ஜனநாயகமொன்றாக எழுந்துள்ளது. நேபாளின் பிரபல மக்கள் செயற்பாட்டினூடாக அடைந்து கொண்ட மைல்கல்லொன்றாகும். WSF இன் செயற்பாட்டிற்காக வசதியை வழங்கும் நிறுவனமாக சர்வதேச கவுன்சில் (IC), ஆசியா பசுபிக் சமூக அமைப்பு (APSF-FC) மற்றும் நேபாளின் ஒழுங்கமைப்புக் குழு (NOC) என்பன வட்டார அமைப்புக்களாகும். டாபிந்து கூட்டமைப்பின் நிர்வாக இயக்குனரான சமிளா துஷாரி அவர்கள் இலங்கையில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டதுடன், குறைந்த வருமானம் மற்றம் சமூக பாதுகாப்பு தொடர்பான சொற்பொழிவையுமாற்றினார்.



சச்சினி மதுரப்பெரும



# ஆரோக்கியம்

பெண்களின் கர்ப்பப்பையை அண்மித்த பகுதி தொடர்பான புற்றுநோய் நிலைமையானது கருக்கட்டல் புற்றுநோய் என அறிமுகப்படுத்தப்படுகின்றது. இங்கு பெண்களின் கருக்கட்டலை அண்மித்த செல்களில் கலவை புற்றுநோய் செல்களின் மூலம் வேறுபடுகின்றது. கர்ப்பப்பை புற்றுநோயானது மிக மெதுவாக உடலினுள் சென்று திரிபடைகின்றது. இதனால் புற்றுநோயை தாமதமாக இனங்கண்டுகொள்வதன் மூலம் அதற்கு தேவையான பரிசோதனைகளை தாமதமாக மேற்கொள்வது என்பது மிகவும் தாக்கத்தை விளைவிக்கக்கூடியதாக இருக்கின்றது. இந்த புற்றுநோயானது, HPV எனும் வைரஸினால் ஏற்படுத்தப்படுகின்றது. இந்த வைரஸினை தடுப்பூசியினால் வெற்றிகரமாக தோல்வியடையச் செய்வதன் மூலம் உடலுறவில் ஈடுபடும் பெண்களுக்கு இது தீவிரமாக பரவுகின்றது. கர்ப்பப்பை புற்றுநோய் ஏற்படக் காரணம்,

- HPV வைரஸ் பரவுதல்
- 16 வயதுக்கு முன்பதாக பாலியல் உறவில் ஈடுபடுதல்
- புகைபிடித்தல்
- நீண்ட காலமாக பிறப்புக்கட்டுப்பாட்டு மாத்திரைகளை உபயோகித்தல் (05 வருடங்களுக்கு மேலதிகமாக)
- பாலியல் செயற்பாடுகளினூடாக பரவுகின்ற நோய்கள் காணப்படல் (STD)
- சக்திமிக்க நோயெதிர்ப்புச் சக்தி காணப்படாமை
- கர்ப்பப்பை புற்றுநோய் காணப்படுகின்ற குடும்பப் பின்னணி

கர்ப்பப்பை புற்றுநோயின் ஆரம்பத்தில் பெரும்பாலும் எந்தவொரு நோய் அறிகுறிகளும் காணப்படமாட்டாது. ஆனால் புற்றுநோய் தொடர்பான அறிகுறிகள் அந்நோய் சற்று தீவிரமாக பரவிய பின் கீழ்வரும் நோய் அறிகுறிகளுடன் காட்டப்படும்.

- யோனி வழியினூடாக ஏற்படும் இரத்தகசிவு : பாலியல் உடலுறவின் பின் ஏற்படும் இரத்தக்கசிவு, மாதவிடாய் காலத்தில் அசாதாரண ரீதியில் ஏற்படும் இரத்தக்கசிவு, மெனோபாஸ் (மாதவிடாய்) இன் பின்னர் ஏற்படும் இரத்தக்கட்டி மற்றும்,
- பாலியல் உறவின் போது வலி ஏற்படுதல்
- யோனி வழியினூடாக துர்நாற்றத்துடன் கூடிய திரவம் வெளியேறுதல்.

கர்ப்பப்பை புற்றுநோயானது, கொஞ்சம் பரவி வரும்போது ஏனைய உறுப்புக்களுக்கும் பரவிய பின் பின்வரும் நோய் அறிகுறிகள் காணப்படும்.

- யோனி மற்றும் அது தொடர்பான பகுதிகளில் ஏற்படும் வலி மற்றும் இடுப்பு வலி

10ஆம் பக்கம் பார்க்க...

# எமது எண்ணம்

இம்முறை சர்வதேச மகளிர் தினமானது 2024ம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் திகதிக்கு உள்ளது. மே மாதம் 01ம் திகதிக்கு கொண்டாடப்படும் தொழிலாளர் தினமானது, தொழில்புரியும் மக்களுக்கு விடுமுறை தினமாக காணப்பட்டாலும், பல்வேறு பிரிவுகளில் தொழில்புரியும் தொழிலாளர்களுக்கு மார்ச் மாதம் 8ம் திகதியென்பது விடுமுறை தினமொன்றாக கருதப்படுவதில்லை. ஆனால் இன்று நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியினுள் எதிர்பாராத விதமாக வாழ்க்கைச் செலவானது, எந்தவொரு கட்டுப்பாட்டு விலையுமின்றி அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பை தாங்கிக் கொள்ள முடியாது, பெரும்பாலான தாய்மார் ஒரு வேளை உணவை மட்டும் உட்கொண்டு வாழ்கின்றனர். வயல் நிலங்களில், தொழிற்சாலையில், பெருந்தோட்டங்களில் மற்றும் மீன்பிடி தொழில்களில் ஈடுபடும் பெண்களின் மேல் சுமத்தப்படும் சுமைகளால் அவர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் ஏராளமானவை. இது பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக காணப்பட்டாலும் குடும்பத்தில் பல்வேறு நெருப்படிகள் காணப்படுகின்றன. இதனால் அவளது வாழ்க்கை தினமும் ஒரு போராட்டமாக காணப்படுகின்றது.


ஆடைத் தொழிற்பிரிவினுள் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் கொடுப்பனவுகள் வெட்டப்பட்டு வருகின்றன. போடிங் அறையினுள் வசிப்பதற்கு அவர்களுக்கு காணப்படும் ஊதியம் போதாமையினால் அவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று பணிபுரிகின்றனர். தமது வயல்களையும் சரிவர செய்யமுடியாது, விவசாயிகள் நஞ்சு குடித்த காலங்களும் உண்டு. நாட்டின் அபிவிருத்திற்கான அடித்தளம் நாம் தான். ஆனால் எமக்கு உரித்தான சட்டதிட்டங்கள் மற்றும் பரிந்துரைகள் என்பன ஊ190 ஆகியவை புள்ளிவிபர அறிக்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டு நாடானது போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ளது. தற்போதளவில் சிறு குழந்தைக்குக் கூட தனியாக பேருந்தில் செல்லமுடியாத நிலைமை காணப்படுகின்றது. உரங்களின் விலை அதிகரித்துள்ளமையால் விவசாயிகள் தமது வயல்நிலங்களை கைவிட்டுவிட்டனர். மோசடி மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு மத்தியில் நன்கு படித்தவர்கள் நாட்டை விட்டு செல்கின்றனர். நாட்டை ஆளும் தலைவர்களின் திருட்டு மோசடிகள் பற்றி யாருக்கு சொல்ல முடியும்? ஆனால் ஆண்டுதோறும் எமது உரிமைகளைக் கோரி போராடுவது, பொறுமையற்று வாழ்க்கைச் சுமையை சுமக்கும் பொறுப்பு பெண்களாகிய எமது தலைமேல் சுமத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, வரிச்சுமையும் சுமத்தப்படுவதால் நெருக்கடிக்கு மேல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இவற்றுக்கு எல்லாம் பதில் கண்ணீர் புகையா?

சமந்தினி

9ஆம் பக்கத் **ஆரோக்கியம்...**

- சிறுசீரக செயலிழப்பு
- **சிறுநீரகம் கழிக்கும் போது சிரமம் ஏற்படுதல்**
- **வேதனைமிக்க மற்றும் வீக்கமடைந்த கால்கள்**
- **அதிக சோர்வு**
- **எலும்பு வலி**
- **குறைந்த எடை**
- **உணவு விருப்பமின்மை**

கர்ப்பபை புற்றுநோயைத் தடுப்பதற்கு சிறந்த வழிதான், செல்களின் வேறுபாடுகளை தாமதமாக இனங்கண்டுகொள்வதுதான். முறையான பரிசோதனையின் மூலம் உங்களுக்கு காணப்படும் தாக்கத்தை இனங்காண முடியும். முன்பு குறிப்பிட்டதைப் போன்று கர்ப்பப்பை புற்றுநோய் வளர்ச்சியடைவதற்கு சில நாட்களாகும். இலங்கையினுள் பயன்படுத்தப்படும் மிக பிரசித்திபெற்ற பரிசோதனை தான் பெப் பரிசோதனை. இந்த பரிசோதனையின் மூலம் செல்களின் மாதிரியொன்று பெறப்படும். நீங்கள் 35வயதிற்கு அதிகமான பெண்ணாயின், அரச மருத்துவ பரிசோதனையின் மூலம் இந்த பெரிகோதனையை இலவசமாக மேற்கொள்ள முடியும். அவ்வாறில்லையேல், இந்த பரிசோதனையை உங்களுக்க விரும்பிய முறையில் தனியார் வைத்தியசாலையிலும் மேற்கொள்ள முடியும்.




இணையம் மூலம் எடுக்கப்பட்டது.



# தொழிலாளர் செய்தி - மேன்பவர் மா:பியா (கூட்டணி)

முறையான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட விவசாய மற்றும் தொழில் தவிர்நத தனியார் மற்றும் அரச துறைகளில் பரவிக் காணப்படும் நிலையற்ற நிலைமை மற்றும் முறைசாரா தொழிலுக்காக மனித வலு தொடர்பாக அல்லது தனி மனிதன் தொடர்பாக தொழிலாளர்களின் தினசரி, மாதாந்த சம்பளத்திற்கு இணைத்துக் கொள்வது இங்கு இடம்பெற்றது. ஆரம்பத்தில் குறைந்த திறன்களுடன் கூடிய தற்காலிக தொழிலுக்காக பணியாளர்களை ஈடுபடுத்திய மனித வலுவானது, தற்போது நிர்வாக மற்றும் முகாமைத்துவ மட்டங்களில் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துகின்றனர். நிரந்தர தொழிலாளருக்கு வழங்கப்படும் பணத்திற்கும், மேன்பவர் தொழிலாளரக்கு வழங்கப்படும் பணத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றன. ஆடைத் தொழிற்துறையில் பணியாளர்களை சேவைக்கு இணைக்கும் போது அவர்களின் தொலைபேசி இலக்கம் மற்றும் தேசிய ஆடையாள அட்டை எண் போன்ற தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றனர். மேலும் அவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்ட பின்னர் அவர்களுக்கு எந்தவொரு சேவை ஒப்பந்தமும் வழங்கப்படமாட்டாது.

உண்மையிலேயே மேன்பவர் என்பது மிக சிக்கலான பணியொன்றாகும். அது ஆடைத் தொழிற்துறைக்கு மட்டுமன்றி, மனித - வலு அமைப்புக்களினூடாக பணிக்கு அமர்த்தப்டுவதென்பது பிரச்சினைக்குரிய விடயமாகும். விசேடமாக கவனத்திற்கொள்ளவேண்டிய விடயம் யாதெனில், எந்தவொரு பிரச்சினை ஏற்பட்டாலும் அதில் முதலில் பாதிக்கப்படுவது தொழிலாளர்கள் தான். பெரும்பாலும் அவர்களின் சம்பளத்தில் உணவுக்கான தொகை வெட்டப்பட்ட பின்னரே அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படும். இதில் அவர்களுக்கென்று வழங்கப்பட்ட குறிப்பிட்ட ஒரு பணி இருக்காது. சில நேரங்களில் ஆண்-பெண் என்ற வேறுபாடின்றி பாரமான வேலைகளும் பெண்கள் மீது சுமத்தப்படுகின்றன. மேலும் இவர்களுக்கு சேவை ஒப்பந்தம் வழங்கப்படாமையினால் தமது சம்பளத்தில் இருந்து எவ்வளவு தொகை வெட்டப்படுவது என்பதை இவர்கள் அறியாதிருக்கின்றார்கள். அத்தோடு தொழிற்சங்கத்திற்கு அங்கத்துவம் வகிக்கும் உரிமையையும் இவர்களுக்கு இழக்க நேரிடுகின்றது. அத்துடன் இவர்கள் பெறும் சம்பளமானது, நிரந்தர தொழிலாளர்களின் சம்பளத்தில் இருந்து வேறுபடுவதால், தமது சகோதர தொழிலாளர்கள் முன் தலைகுனியும் சந்தர்ப்பங்களும் உண்டு. சில நேரங்களில் இதன் மூலம் குடும்பத்திலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறு தரமற்ற வேலைவாய்ப்பு தொடர்பான விசேட மனித - வலு தொழில் பற்றிய தெளிவான அரச கொள்கையொன்று காணப்படாமை மற்றும் தொழிற்சங்க செயற்பாடும் இதன்மூலம் தடைப்படுகின்றது. எவ்வாறாயினும், ஆடைத் தொழிற்பிரிவில் அந்நிய செலாவணியை இவர்கள் பெற்றுக் கொடுக்கின்றார்கள். அரச செயற்பாடுகளை மதிப்பிடும் மனித உரிமைகள் ஆணையகம் மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு போன்ற அமைப்புக்களினூடாக நியாயமான விடயங்களை அரசிடம் முன்வைப்பது நேரிடுகின்றது.

யசாரா விதுமிணி

# சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம் மற்றும் நடமாடும் வைத்திய சேவையின் காட்சிகள் சில...


























இல, 221, வெலபட வீதி, கட்டுநாயக்கவை வசிப்பிடமாகக் கொண்ட எச்.ஐ.சமன்மலி ஆகிய என்னால் ரத்வெகி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.